DINAKARAN

10 MAY 2022

PAGE 6

# உலக பல்கலைக்கழக தரவரிசையில் புதுவை பல்கலை முன்னேற்றம்

## உதவி பதிவாளர் தகவல்

புதுச்சேரி, மே 10: புதுச்சேரி பல்கலைக்கழக உதவி பதிவாளர் (மக்கள் தொடர்பு) மகேஷ் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

உலக அளவில் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழக தரவரிசையின் வெளியீட்டாளரான டைம்ஸ் உயர் கல்வி, ஐக்கிய நாடுகளின் நிலையான வளர்ச்சி இலக்குகள் தொடர்பான பல்கலைக்கழகங்களை மதிப்பிடும், மதிப்பீடு தரவரிசை பட்டியல்-2022ஐ வெளியிட்டது. இதில் 110க்கும் மேற்பட்ட நாடுகளில் இருந்து 1,524 பல்கலைக்கழகங்கள் பங்கேற்றுள்ளன. இதில் 64 இந்திய பல்கலைக்கழகங்கள் இடம் பெற்றுள்ளன.

புதுவை பல்கலைக்கழகம் இந்த தரவரிசை மதிப்பீடு முறையின் முதல் பதிப்பில் இருந்து இடம்பெற்று வருகிறது. இந்நிலையில் கடந்த 28ம் தேதி வெளியிடப்பட்ட 4வது பதிப்பில் புதுவை பல்கலைக்கழகம் 601-800வது இடத்தில் உள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் பகிர்ந்து கொள்கிறோம். மேலும், முந்தைய ஆண்டில் பெற்ற மதிப்பெண் 47.6-56.5ஐ காட்டிலும் 57.3-64 மதிப்பெண்களுடன் கணிசமாக மேம்படுத்தப்பட்டுள்ளது.

பல்கலைக்கழகங்களின் பங்களிப்பால் சமுதாயத்தில் ஏற்பட்டுள்ள தாக்கத்தை அளவீடு செய்ய இந்த தரவரிசை முறை ஒரு அளவுகோலாக எடுத்துக்கொள்ளப்படுகிறது. நிலையான வளர்ச்சி இலக்குகள் தரவரிசை 2022ன் படி புதுவை பல்கலைக்கழகம் பருவநிலை நடவடிக்கை, தண்ணீருக்கு கீழே வாழ்க்கை, நிலத்தில் வாழ்க்கை மற்றும் தரமான கல்வி ஆகிய குறியீட்டில் 201-300 தரவரிசையுடன் பல இந்தியப் பல்கலைக்கழகங்களை விட கணிசமாக முன்னேறியுள்ளது.

புதுவை பல்கலைக்கழகம் கடந்த ஆண்டு பொறுப்பான நுகர்வு மற்றும் உற்பத்தி மற்றும் சுத்தமான நீர் சுகாதாரம் தொடர்பான எஸ்டிஜிகளில் 201-300 தரவரிசை, பாலின சமத்துவம் 301-400 தரவரிசை மற்றும் பரஸ்பர புரிந்துணர்வு குறியீட்டு படி 401-600 தரவரிசையுடன் மேம்பட்டு உலக பல்கலைக்கழக தரவரிசை மற்றும் ஆசிய பல்கலைக்கழக தரவரிசை ஆகியவற்றிலும் பல்கலைக்கழகம் தனது நிலையை தக்கவைத்துக்கொண்டுள்ளது.

புதுவை பல்கலைக்கழகம் டைம்ஸ் உயர்கல்வி உலக தரவரிசையை தவிர, க்யூஎஸ் உலக பல்கலைக்கழக தரவரிசை, பொதுநல பல்கலைக்கழகங்களின் சங்கம் மற்றும் தேசிய நிறுவன தரவரிசை கட்டமைப்பு போன்ற தேசிய அளவிலான தரவரிசையில் பங்கேற்கிறது. மேலும் அடல் இன்னோவேஷன் தரவரிசை, அவுட்லுக்-ஐகேர் தரவரிசையில் கணிசமான மதிப்பெண்கள் பெற்றுள்ளது. இந்த நிகழ்வில் புதுவை பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் குர்மீத் சிங், இந்த குறிப்பிடத்தக்க சாதனைக்கு தனது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார். மேலும் ஆசிரியர்கள், அலுவலர்கள், ஊழியர்கள், மாணவர்கள் ஆகியோரின் முயற்சிகள் மற்றும் பங்களிப்புக்காக அவர்களை பார்ராட்டினார். வரும் ஆண்டுகளில் பல்கலைக்கழகம் புதிய உயரங்களைத் தொட முயற்சிகளை மேற்கொள்ள வலியுறுத்தினார். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.